பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## மாத இதழ்

மலர் 14

ஜூன் 2013

இதழ் : 2

# உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்

ஏசா. 55:2



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் 2013 —ம் வருடத்தின் 6 —ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். கடந்த மாதத்தில் சபையின் ஊழியங்கள், ஆராதனைகள் மற்றும் விசேஷித்த ஆராதனைகள் யாவற்றிலும் தேவ பிரசன்னத்தை உணர முடிந்ததால் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள். இந்த மாதம் முதல் 3 மாதங்கள் உஷ்ணகால விடுமுறையாக படிக்கும் பிள்ளைகளுக்கு இருக்கும். உஷ்ணம் அதிகமாகாதபடிக்கு ஜெபித்துக் கொள்ளுங்கள். அது போல் தாய் தேசம் போகிறவர்க்காய் ஜெபிக்கவும்.

இந்த மாதம் சபையின் மூலம் நடக்கும் ஊழியங்கள், ஆராதனைகள், வேத வகுப்பு, முழு இரவு ஜெபம் போன்ற ஊழியங்கள் சிறப்பாக நடக்கவும் அநேகர் கலந்து கொள்ளவும் ஜெபிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். ""**இயேசுவின் சிந்தை**"" (பிலி. 2:5). ""**ஒருவரையோருவர் தங்களிலும் மேன்மையானவர்களென எண்ணக் கடவீர்கள், அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளை நோக்குவார்களாக**"" (பிலி. 2:3,4).

1. மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ண வேண்டும். அற்பமாக எண்ணக் கூடாது, பெருமை கூடாது. இயேசு தான் தேவ குமாரனாக இருந்தும் மற்றவர்களை கனம் பண்ணினார். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று அறிந்தும் அவன் கால்களை கழுவினார். தன்னைவிட பெரிய ஆவிக்குரியவர்கள் என்று சொல்லவில்லை. ஆனால் அற்பமாக எண்ணவில்லை. விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை, வியாதியில் அகப்பட்டு இருந்தவர்களை இயேசு அற்பமாக எண்ணவில்லை. தன் நிலையை ஒத்துக் கொள்ளும் போது உதவி செய்கிறார். ஆனால் எல்லாம் தெரியும் என்று இருந்த பரிசேயர், வேதபாரகரை கடிந்து கொண்டார், மாய்மாலக்காரர் என்று.

2. ""**அவனவன் தனக்கானவைனளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக**"" (பிலி. 2:4). தனக்கு என்ன தேவையோ அவைகள் மற்றவர்க்கும் தேவை என்பதை நினைக்க வேண்டும். வீட்டில் கணவன் மனைவி இடையே அநேக நேரங்கள் சண்டைகள். நமக்கு என்ன வேண்டுமோ அல்லது என்ன உரிமை உள்ளதோ அது இருவருக்கும் உண்டு என்பதை உணர வேண்டும்.

நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். -சங். 124:6

வேலை ஸ்தலத்திலும் சபையிலும் தனக்கே எல்லாம் என்று நினைப்பது சுய நலம். இதை இயேசு கூடாது என்று சொல்லுகிறார். சுயநலம் இருந்தால் அது இயேசுவின் சிந்தையல்ல.

இயேசுவை போல் நாமும் சிந்திப்போம். அதுவே நம்மைக் குறித்ததான தேவனின் சித்தம். அதை சிந்திப்பது மாத்திரமல்ல செயல்படுவோம். தேவன் கொடுத்த இந்த வாழ்க்கையில் எத்தனையோ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இவைகள் கிடைக்காதோர் கோடா கோடி பேர் உண்டு. அவர்களுக்கும் இருக்கும் தேவைகளுக்காய் ஜெபிப்போம் கொடுப்போம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

## ANSWER FOR THE QUIZ (MAY)

1. Honour thy father and mother – Matt. 15:4
2. Peter – Matt. 16:18
3. Lost – Matt. 18:11
4. Peter, James and John his brother. – Matt. 17:1
5. John – Matt. 21:32
6. As a grain of mustard seed. – Matt. 17:20
7. God – Matt. 19:17
8. Caesar’s – Matt. 22:21
9. Mary Magdalene and the other Mary. – Matt. 28:1
10. Mount of Olives. – Matt. 24:3

## சிரி.... சிந்தி

நூறு கிலோ அரிசி மூட்டை தூக்குபவனுக்கு அதை வாங்க சக்தியில்லை. வாங்குபவனுக்கோ அதை தூக்க சக்தியில்லை.

**- அஹமதி தமிழ் திருச்சபை**



# தேவன் தரும் மகிழ்ச்சி

## தேவ செய்தி

**""அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்""** (ஏசா. 55:2)

**உலகம் தராத திருப்தி:—** பசியால் வாடும் ஏழைச் சிறுவனுக்கு ஒரு கலசம் கூழ் திருப்தியைக் கொடுக்கும். ஆனால் மாடி வீட்டுப் பிள்ளைக்கோ பிசா அல்லது பர்கர் சாப்பிட்டால் தான் திருப்தி வரும். திருப்தி என்ற வார்த்தை பலருக்கும் பல வடிவங்களில் காட்சி தருகிறது. எனவே தான் மனிதன் **""தன்""** தேவைகளை சந்திக்க பல வழிகளில் முயற்சி செய்கின்றான். ஆனால் அந்த தேவைகள் என்கிற பட்டியல் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானது. நீண்டு கொண்டே போகும். ஒரு முடிவில்லா தொடர்கதை. இப்படித்தான் மனிதன் தன்னை திருப்தி செய்யாத பொருட்களுக்காக நேரத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறான். அவனுக்குள்ளோ சமாதானமில்லை.

**வேதனை தரும் உலகம்:—** சமாதானத்தைக் குறித்து பட்டிமன்றம் போடுகிறார்கள்: மாநாடுகள் நடத்துகிறார்கள். ஆனால் தேசத்திலே சமாதானம் இல்லை:காரணம் திருப்தி இல்லாத வாழ்க்கை. அதனால் பாவம் உலகில் மலிந்து கிடக்கிறது. அந்த பாவத்தின் அகோரம் தலைவிரித்து தாண்டவமாடுகிறது.ஒரு குடும்பத்திலேசமாதானம் இல்லை. இந்த சூழ்நிலையில் தான் ஆண்டவர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார், **""நீங்கள் அப்பம் அல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்""** (ஏசா. 55:2). ஏதேன் தோட்டத்துக்கனி பார்வைக்கு மிக நன்றாய் தான் இருந்தது. முடிவிலே ஆதாமுக்கு வருத்தத்தைக் கொடுத்தது (ஆதி. 3:17). பாபிலோனிய சால்வையானது ஆகானுக்கு மரணத்தைக் கொடுத்தது (யோசு. 7:25). முப்பது வெள்ளிக் காசு யூதாவுக்கு அழிவைக் கொடுத்தது (மத். 27:5).

**தேவன் தரும் விடுதலை:—** மனிதன் தன் சுய புத்தியினால் சுய இச்சையினால் நாடுகின்ற காரியங்கள் அவனுக்கு சாபத்தைக் கொடுக்கும். **""மனுஷனுக்கும் செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு: அதின் முடிவோ மரண வழிகள்""** (நீதி. 14:12). மோசே எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (எபி. 11:26). தேவன் மோசே மூலமாக இஸ்ரவேலருக்கு மகத்தான விடுதலையைக் கட்டளையிட்டார். அவருடைய வழிநடத்துதல் வித்தியாசமானது. **""என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்லஹ உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்""** (ஏசா. 56:8). தேவன் நமக்கு வருத்தத்தை அல்ல கொழுப்பான பதார்த்தத்தினால் நம்மை மகிழ்ச்சி யாக்க விரும்புகிறார். **""கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத்தரும்: அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்""** (நீதி. 10:22). நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள் (ஏசா. 55:1). ஆங்கிலத்தில் "Come, buy and eat" (ஏசா. 55:1) என சொல்லப்படுகிறது. இதில் மூன்று காரியங்கள் அடங்கியிருக்கிறது.

1. **வாருங்கள்** (Come):— **""ஓ தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்""** (ஏசா. 55:1) என்று ஆண்டவர் அழைக்கிறார். **""வா""** என்ற அர்த்தமுள்ள சொல் ஏசா. 55:1 —ல் மூன்று முறை வருகிறது. இயேசு

கர்த்தாவே; தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல; எங்கள் சிறையிருப்பைத் திருப்பும். –சங். 126:4

வின் கரங்கள் சிலுவையில் விரிக்கப்பட்ட கரங்கள். எதற்கென்றால் நாம் அவரிடத்தில் வரவேண்டும் என்று விரும்புகிறார். அவருடைய கரங்கள் குறுகின கரங்கள் அல்ல: விரிக்கப்பட்ட கரங்கள். **""இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை""** (ஏசா. 59:1). ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்... ... தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் (வெளி. 22:17). மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றவர் வேதத்தின் கடைசி அதிகாரம் வரை நம்மை **""வா""** என்று அழைக்கிறார்.

2. **வாங்குங்கள்** (Buy):– தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கென்று மிகவும் நல் விசேஷித்த விதமாக வைத்திருக்கிறார். அவரிடமிருந்து அதை நாம் வாங்கிக் கொள்ள வேண்டும். அவர் கட்டாயப்படுத்தி திணிக்கிறவர் அல்ல. நாம் வாஞ்சையோடு அதை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர் விரும்புகிறார். தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். அவர் கொடுக்கும் தண்ணீர் வித்தியாசமானது. **""நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது: நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்""** (யோவா. 4:14). இயேசு தன்னையே நமக்காக தந்தார். **""என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன்உண்டு: நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன்""** (யோவா. 6:54). வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவன் அடையப் போகிற ஆவியைக் குறித்து இயேசு இப்படிச் சொன்னார் (யோவா. 7:38,39). அவர் நமக்கு பரிசுத்த ஆவியைத்தர விரும்புகிறார். அவருடைய பரிசுத்த இரத்தத்தைக் கிரயமாய் செலுத்தி இலவசமாய் நமக்குத் தருகிறார். இதுதான் ஒரு தகப்பனின் அன்பு. **நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்** (ஏசா. 55:1). திராட்சரசம் இயேசுவின் பரிசுத்த இரத்தத்தைக் குறிக்கிறது: திருப்பந்தியைக் குறிக்கிறது. நாம் அவரோடு கொள்ளும் உறவை உடன்படிக்கையைக் குறிக்கிறது. **""பால்""** பரிசுத்த வசனத்தைக் குறிக்கிறது. **""நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்""** (1பேது. 2:3). அப்பொழுது அவர் தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன் (ஏசா. 55:3) என்றார்.

3. **சாப்பிடுங்கள்** (Eat):– வாங்கினதை யாராவது சாப்பிடாமல் இருப்பார்களா! இது ஆண்டவரோடு நாம் கொள்ளும் ஐக்கியத்தைக் குறிக்கிறது. **""இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்: ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவை திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன்: அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்""** (வெளி. 3:20). ஆண்டவர் நம்மை விட்டு பிரிந்தல்ல இணைந்து வாழவே விரும்புகிறார். **"""நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்""** (யோவா. 15:7). **""நானே திராட்சச் செடி: நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும்**

**நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்""** (யோவா. 15:5). அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் போது நம்முடைய வாழ்வில் ஒன்பது விதமான ஆவியின் கனிகள் காணப்படும் (கலா. 5:22,23). அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும் (ஏசா. 55:3). அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் வாழ்வின் சாபங்கள், பரம்பரை சாபங்கள் மாறும். ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட முள்ளும் குருக்கும் நம்மைவிட்டு விலகும். முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சங்கள் முளைக்கும்: காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச் செடி எழும்பும். அது கர்த்தருக்கு கீர்த்தியாகவும் நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும் (ஏசா. 55:13). ""தேவனே நான் உமதண்டையில் ... இன்னும் நெருங்கி சேர்வதே என் ஆவல் பூமியில்"" என நம்மை அர்ப்பணிப்போம். தேவன் தரும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோம்ஹ ஆமென். அல்லேலூயா!

**கிறிஸ்துவுக்குள் அன்புள்ள**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

---

# BREAKING NEWS

## Holiday Home work for Sunday School Children

**And that from childhood you have known the Holy scriptures, which are able to make you wise for salvation through faith which is in Christ Jesus (2 tim. 3:15).**

**Here is your holiday homework to enrich your Bible knowledge.**

| Class in Sunday School | Chapter to be memorized |
|---|---|
| Beginners | Psalm - 23 |
| Primary | Psalm - 24 |
| Junior | Psalm - 34 |
| Intermediate | Psalm - 103 |

*Have a lot of fun & enjoy your holidays*

**Sunday School Teachers**
**St. Paul's Church, Ahmadi**

Note to parents:- Please encourage your children to memorize the Bible Verses.

கர்த்தருக்குப் பயந்து; அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ; அவன் பாக்கியவான். _சங். 128:2

# படித்ததில் பிடித்தது

**""உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடுஹ அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்""** (பிர. 11:1). சாலொமோன் ராஜா இந்த வசனத்தை விதைக்கும் காலத்தில் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்த போது எழுதப்பட்டதாக கூறப்படுகிறது. அநேக விவசாய நிலங்கள் நைல் நதிக்கு அருகாமையில் இருந்தது. அந்த நதியிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால் விதைக்கும் காலத்தில் வெள்ளம் வரும்போது ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கிவிடும். அப்போது விவசாயிகள் அடுத்த வருடம் வரும்வரை சும்மா இருந்தால் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்றுஎண்ணி, வெள்ளம் கரையேறிய பிறகு அந்த தண்ணீரின் மேல் விதைகளை தூவி விடுவார்கள். அந்த விதைகள் தண்ணீர் வற்றிய பிறகு மண்ணில் போய் பதிந்து துளிர்விடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவர்களின் நம்பிக்கையின்படியே தண்ணீர் வற்றிய பிறகு அந்த விதைகள் நிலத்தின் எங்காவது விழுந்து முளைத்தெழும்பி நெற்பயிராக எழும்பும். இதைக் கண்ட சாலொமோன் ஞானி மேற் சொன்ன வசனத்தை எழுதியிருக்கிறார்.

நாம் செய்கிற நற்காரியங்களுக்கும் ஊழியங்களுக்கும் ஒருவேளை உடனடியாக பதில் வராமலிருக்கலாம். அதனால் சில வேளைகளில் சோர்ந்து அப்படியே பாதியில் விட்டுவிடுகிறோம். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலா. 6:9) என்று வேதம் கூறுகிறது. நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து நன்மை செய்வோமானால் நிச்சயமாக மிகப்பெரிய அறுவடையை நாம் அறுப்போம். சில இடங்களில் கர்த்தருடைய வார்த்தைகளை எத்தனையோ முறை சொல்லியும் ஒரு பலனையும் காணாமல் போனதினால் சோர்ந்து போகிறீர்களா! சோர்ந்து போகாமல் தொடர்ந்து செய்யுங்கள். நீங்களும் ஒருநாள் அதன் பலனை காணும்படி கர்த்தர் செய்வார். சில இடங்களில் வசனத்தை விதைத்த உடனே ஏற்றுக் கொள்வார்கள். ஏனென்றால் நமக்கு முன்னே சென்றவர்கள் அந்த இடத்தில் வசனத்தை விதைத்திருந்தபடியால், பின் சென்றவர்கள் வசனத்தை சொன்ன உடனே கிரியை நடப்பித்து பதில் வந்து விடுகிறது. ஆகையால் சோர்ந்து போகாமல் தொடர்ந்து விதைப்போம். நாட்களுக்குபின் அதன் பலனைக் காண்போம்.

சொந்த வீட்டிலும் எதிர்பார்த்த நன்மையை காணாமல் சோர்ந்து போயிருக்கிறீர்களா! தளர்ந்து போகாமல், சோர்ந்து போகாமல் தொடர்ந்து நாம் ஜெபிப்போமானால் கர்த்தரால்நிச்சயமாக நமக்குநன்மை உண்டாகும். **"நிச்சயமாகவே முடிவு உண்டு: உன் நம்பிக்கை வீண்போகாது""** (நீதி. 23:18) என்ற வசனத்தின்படி நம்முடைய நம்பிக்கை வீண்போகாது.**""அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசம் அடைந்தார்கள்: அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்""** என்றும் வேதம் நமக்கு கூறுகிறது. ஆகவே சோர்ந்து போகாதிருங்கள்: உங்கள் நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள். அந்த விவசாயிகளின் நம்பிக்கை வீணாய் போகாமல் விதைத்த விதை அநேக நாட்களுக்கு பிறகு முளைத்தெழும்பி பலன் கொடுத்தது போல, நம்முடைய நம்பிக்கையும் ஒரு போதும் வீணாய் போவதில்லை. உங்கள் முகம் பிரகாசமடையும்படி கர்த்தர் உங்கள் ஜெபங்களுக்கு பதில் கொடுப்பார். ஆமென்.

**அன்புள்ள சகோதரன்**
**சிவகுமார்**

சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள். _சங். 129:5

# இனி மௌனமாயிருக்காதே!




தேவனின் ஜனங்களே!
தேசம் தேசத்தை விழுங்கும்
அபாயம் நடக்குதுங்க....
உயிரே உயிரை வெறுக்கும்
அவலம் நிகழுதுங்க....
தன் கை தன் கழுத்தறுக்கும்
கலகம் நேருதுங்க....
எல்லாமே இப்புவியில் அரங்கேறுதுங்க.
கடல் கூட மன்னித்து உறங்குகிறது!
ஏழை வயிறெல்லாம் சுருங்குகிறது!
இயேசுவின் உறவெல்லாம் கதறுகிறது!
முறைப்பதனால் முன்னேற்ற
முடிவு வருமோ!
கடையடைப்பினால் இனிய
பதில் வருமோ!
தீக்குளிப்பதனால் தெளிந்த
தீர்வு வருமோ!
எரிப்பதற்கும்.. எரிவதற்கும்..
எடுப்பதற்கும்.. கெடுப்பதற்கும்..
இழப்பதற்கும்.. வளர்ப்பதற்கும்..
இலங்கை போன்ற தேசங்களில்
இனி என்ன இருக்கிறது!
நடமாடும் கொஞ்சம் உயிர்களை தவிர....
இன்னுமா தெரியவில்லை
இந்த உயிர் கொல்லிகளுக்கு
உயிரின் விலை என்ன என்று..
மண்ணாசையாளும் மனிதன் மறைந்து
விண்வேந்தர் பாதம் சரணடைந்து
குறைகளுக்காக குமுறுங்கள்..
தேவன் இலங்கை போன்ற
தேசங்களை கட்டாராகில்....
எல்லா அரசுகளின் பிரயாசமும்
விருதாவாய் போகுமே!
இப்போதும் நாம் மௌனமாயிருந்தால்..
ஈன தேசங்களின் இரட்சிப்பு என்னவாகும்!

**- செல்வகுமார்**



## மே மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய்யில். — லேவி. 24:2
2. அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதிக்கு கொண்டுவந்ததனால். — லேவி. 10:1 — 2
3. யூபிலி வருஷம். — லேவி. 25:11
4. இரத்தத்தில் இருக்கிறது. — லேவி. 17:11
5. எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிட வேண்டும். — லேவி. 23:22
6. விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் ...அசைபோடுகிறதுமானவை — லேவி. 11:3
7. ஏழு நாள். — லேவி. 8:33
8. முதலாம் மாதம் பதினாலாம் தேதி — லேவி. 23:5
9. 2 காட்டுப்புறாக்களையாவது, 2 புறா குஞ்சுகளையாவது. — லேவி. 5:7
10. கொலை செய்யப்பட வேண்டும். — லேவி. 20:27
11. ஊரிம், தும்மிம், — லேவி. 8:8
12. அந்நியரை. — லேவி. 19:33
13. உப்பினால் — லேவி. 2:13
14. ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கு. — லேவி. 6:20
15. போஜன பலியில் மீதியானது. — லேவி. 2:9



## ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis. ஜீனா சதீஸ்குமார் | Sis. விக்டோரியா ராஜன் |
| Sis. பிரியா பிரேம்குமார் | Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட் |
| Sis. ஜெபா | Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம் |
| Sis. ஹெப்சி சாம் | Sis.பிரிஸ்கில்லா செங்குட்டுவன் |
| Sis. மரகதம் ஸ்டீபன் | Sis. லதா கிறிஸ்டோபர் |
| Sis. ஹேனா எசேக்கியேல் | Sis. சுகந்தி தம்புகுமார் |
| Sis. சாந்தி ஸ்ரீனிவாசன் | Sis. செலின் டேவிட் |
| Sis. அனிதா தாஸ் | Sis. லைசா பொன்னையன் |
| Sis. ஜோன் அசோக்குமார் | Bro. ஜாண் |
| Bro. அருள்மணி | Bro. லாசர் |
| Bro. எட்வின் சாம் | Bro. இம்மானுவேல் |
| Bro. ஜாண்சன் | Bro. பக்தராஜ் |

## FLASH NEWS

**Due to the summer holidays, "Bible Quiz for Children" will not be there during June, July and August.**

இது முதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக. _சங். 131:3

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜெஸ்லி டேனியல்
- செல்வி. சாரா கிரேஸ் சாம்சன்
- செல்வி. பிரவீனா லாசர்
- செல்வி. ஆன்ஸ்லி ஆல்பர்சிங்
- செல்வி. சாரா ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
- செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
- செல்வி. நோயல் யோவா தாமஸ்
- செல்வி. ஜெபீலா ஷர்லின் ஜேம்ஸ்
- செல்வி. ஜெய்னி டேனியல்
- செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ
- செல்வன். வெங்கடேஷ் ராஜன்
- செல்வன். ஃபீஸ்டஸ் ஃபெலிக்ஸ்
- செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
- செல்வன். ராயன் சதீஷ்குமார்
- செல்வன். ஜெய்ராஜ் விசு
- செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
- செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
- செல்வன். ஸெர்வின் சுகுமார்
- செல்வன். ஜோஷ்வா ஜோசப்
- செல்வன். காலேப் ஜாண்பீற்றர்
- செல்வன். ஜோஷ்வா ஜாண்சன்
- செல்வன். ரனால்டோ ஜோசப்
- செல்வன். ஜாண் ஜெரமியா மில்லர்
- செல்வன்.சாம்சன் பிலிப் எசேக்கியல்
- சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
- சகோதரி. வளர்மதி அல்போன்ஸ்
- சகோதரி. நிர்மலா ஆ. யேசுதாஸ்
- சகோதரி. அனிதா ஜெஸ்டின்
- சகோதரி. டெய்சி ரோஸ் எபெநெசர்
- சகோதரி. எஸ்தர் விசு
- சகோதரி.இசைவாணி வில்கின்ஸ்சன்
- சகோதரி. வித்யாவதி ஜெயச்சந்திரன்
- சகோதரி. உமா எட்வர்ட் ராஜா
- சகோதரி. பிரமிதா ரூத் பிரிஜ்டா
- சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீற்றர்

- சகோ. ஜாண் கெஸ்டன்
- சகோ. ஸ்டீபன். R
- சகோ. ஜீவா
- சகோ. ஜெஸ்டின்
- சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
- சகோ. டேனியல் எசேக்கியேல்
- சகோ. பால் புருஷோத்தமன்
- சகோ. கிரன் குமார்
- சகோ. ஜாய்ஸ்சன்
- சகோ. பக்தராஜ்
- சகோ. மனோகரன்
- சகோ. அந்தோனி சாமி
- சகோ. பால் பாண்டியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- ❖ திருமதி & திரு. எஸ்றா டேனியல்
- ❖ திருமதி & திரு. பால் ஜெகநாதன்
- ❖ திருமதி & திரு. சஜின் ராஜன்
- ❖ திருமதி & திரு. சதீஷ்குமார். E
- ❖ திருமதி & திரு. ஜாண் வெஸ்லி
- ❖ திருமதி & திரு. அந்தோனிசாமி
- ❖ திருமதி & திரு. ஆ. ஜேசுதாஸ்
- ❖ திருமதி & திரு.டேவிட் ஜெயகுமார்
- ❖ திருமதி & திரு. ஜெயச்சந்திரன்
- ❖ திருமதி & திரு. ஐசக்துரை
- ❖ திருமதி & திரு. ஸ்டீபன். R

ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன். -சங். 132:15

# ஜூன் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 02-06-2013 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. ஜசக்துரை |
| 09-06-2013 | சகோ. விசு | சகோ. யேசுநாயகம் |
| 16-06-2013 | சகோ. ஸ்டாலின் | சகோ. ஆசிர்வாதம் |
| 23-06-2013 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. கிறிஸ்டோபர் |
| 30-06-2013 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஸ்ரீனிவாசன் |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 07-06-2013 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஸ்டாலின் |
| 14-06-2013 | சகோ. அற்புதராஜ் | சகோ. பிரேம்குமார் |
| 21-06-2013 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28-06-2013 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 06-06-2013 மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை

முழு இரவு ஜெபம்: 13-06-2013 இரவு 10 pm முதல் காலை 2 am வரை

---

வாலிபர் கூடுகை: 28-06-2013, சகோ. ஏசுநாயகம்; சபை வீடு, ஃபாஹகீல்

பெண்கள் கூடுகை: 5-06-2013, Sis. லதா கிறிஸ்டோபர் இல்லம், மங்காஃப்

கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். -சங். 133:3

# அப். ததேயு எனப்பட்ட யூதாவின் இரத்த சாட்சி

இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் யூதா என்ற பெயரை உடையவர்கள் இருவர் இருந்தனர். ஒருவர் ததேயு எனப்பட்ட யூதா. மற்றொரு யூதா இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத். அப். ததேயு தான் எல்லா சீஷர்களிலும் இளையவர். இவர் அல்பேயுவின் சகோதரனாகிய யூதா ஆவார். இவர்தான் யூதா நிருபத்தையும் எழுதியவர். யூதாவிற்கு ததேயு, லேபேயு என்ற பெயர்களும் உண்டு. யூதா என்பதற்கு மேன்மை பாராட்டத்தக்கவன் என்று பொருள். ததேயு என்பது எபிரேய பெயர். ததேயு என்பதற்கு மார்பு என்ற அர்த்தமும் உண்டு. லெபேயு என்பது கிரேக்க பெயர். லெபேயு என்பதற்கு இதயம் என்று பொருள்படும்.

முதல் மூன்று நற்செய்தி நூல்களிலும் இவரது பெயரை தவிர வேறு ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. யூதா மற்ற சீசரோடு சேர்ந்து இயேசுவை பின்பற்றினான். இயேசுவிடம் பெரிய செயல்களை நம்பிக்கையோடு எதிர்பார்த்தான். இயேசு ஒருமுறை ஆவியானவரை பற்றி பேசும்போது யோவான் 14:22 —ல் ஸ்காரியோத் அல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்த காரணம் என்ன என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக, ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம் பண்ணுவோம் என்று அன்பை பற்றிய காரியங்களை விளக்கிக் கொடுத்தார். யூதாஸ்காரியோத் ஒருமுறை கூட இயேசுவை பார்த்து, ஆண்டவரே! என்று சொல்லவில்லை. ஆனால் ஸ்காரியோத் அல்லாத யூதாவோ யோவான் 14:22 —ல் இயேசுவை பார்த்து ஆண்டவரே என்று சொல்லுகிறான். ஆனாலும்
யூதா ஆவிக்குரியவைகளில் சற்று குறைவான புத்தியுள்ளவானவே இருந்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்தான் முழு விசுவாசம் உடையவரானார்.

கிறிஸ்துவை நேசித்த யூதா மற்ற அப்போஸ்தலர்களுடன் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்ட பிறகுதான் இவரும் நட்சத்திரமாக ஜொலித்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கப்படுவதற்கு முன்பு யூப்ரட்டீசுக்கு அருகிலுள்ள வடக்கு மொசபத்தோமியாவின் நகரத்தின் எடிசாவின் அரசன் அப்ரகாரசு இயேசுவுக்கு ஒரு கடிதம் எழுதி அந்த அரசனுடைய தூதுவரான அனனியாவிடம் கொடுத்து எருசலேமிற்கு அனுப்பினான். அந்த கடிதத்தின் சுருக்கமாவது....

எடிசாவின் அரசன் அப்ரகரசு எருசலேம் நாட்டில் தோன்றிய இயேசுவுக்கு நல்வாழ்த்து கூறி எழுதுவதாவது. உம்மூலமாக நடைபெறும் செயல்களை நான் கேள்விப்படுகிறேன். மருந்துகள் இல்லாமல் மூலிகைகள் இல்லாமல் உம்மாலே அநேகர் சுகம் பெறுவதாகவும், குருடர் காண்பதாகவும், முடவர் நடப்பதாகவும், தொழுநோயாளிகள் குணப்படுவதாகவும், அசுத்த ஆவிகளும் பேய்களும் துரத்தப்படுவதாகவும், நீங்காத நோய்களும் நீங்குவதாக கேள்விப்படுகிறேன். இறைவன் விண்ணிலிருந்து இறங்கி வந்தாலொழிய இப்படிப்பட்ட அற்புத செயல்களை செய்ய முடியாது. நானும் நோயினால் துன்பப்படுகிறேன். நீர் வந்து என் நோயினை குணப்படுத்த வேண்டுகிறேன். யூதர்கள் உமக்கு விரோதமாக முறுமுறுப்பதாகவும், உமக்கு தீமை செய்ய சதி செய்வதாகவும் கேள்விப்படுகிறேன். நான் உயர்ந்த நகரை உடைய அரசன். நான்

உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து; கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். –சங். 134:2

உமக்கு ஒரு செல்வ செழிப்புள்ள அரண்மனையை கட்டித் தருகிறேன். நாம் இருவரும் இந்த நகரத்தில் இருக்க இதுவே போதும் என்னிடம் வாரும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த கடிதம் சீஷர்கள் கையில் கிடைத்தது.

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு தோமா ததேயுவை எடிசாவிற்கு அனுப்பினார். அவருக்கு துணையாக இயேசு ஒருமுறை 70 சீஷர்களை தெரிந்தெடுத்திருந்தார். அதில் ஒருவனாகிய தொபியா என்பவன் ததேயுவிற்கு துணை யாக சென்றான். அப். ததேயுவும் தொபியாவும் அங்கு தங்கி நற்செய்தி அறிவித்து அநேகரை குணப்படுத்தினார்கள். இயேசுவின் சீஷனாகிய ததேயுவை அந்நாட்டு அரசன் அப்ரகரசு சந்தித்து சொன்னான்.... நான் இயேசுவை அதிகமாக நேசிக்கிறேன். இயேசுவை சிலுவையில் அறைந்த யூதர்களை என் சேனைகளைக் கொண்டு போய் அழிப்பேன் என்றானாம். அப். ததேயு அரசனுடைய நோயை குணப்படுத்தி இயேசுவை பற்றி நற்செய்தியை அறிவித்தான். அரசன் அப்ரகாரசும் அந்நாட்டு மக்களும் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். இது ஆர்மீனிய நாட்டின் முதல் கிறிஸ்தவ நாடானது. அரசன் அப்ரகரசு அப். ததேயுவிற்கு பொன்னையும், பொருளையும், வெள்ளியையும் அள்ளிக் கொடுத்தான். அப். ததேயு அவற்றை எடுத்துக் கொள்ளவில்லை. அப். ததேயு அரசனை பார்த்து, நான் அப்போஸ்தலன்: அப்போஸ்தலன் என்றால் கட்டளையோடு அனுப்பப்பட்டவன். நான் உலகமெங்கும் நற்செய்தியை நற்செய்தியை அறிவித்து அனைவரையும் கிறிஸ்துவின் சீஷனாக்குவதுதான் என் வேலை. இந்த அற்பமான பொன்னையும், பொருளையும் இழக்க வேண்டியவர் தான் நான். அதை சொந்தமாக்கிக் கொள்வது எப்படி என்று பதில் சொன்னாரம்.

இப்பகுதியில் கி.பி 43 — 60 வரை அப்போஸ்தலனாகிய ததேயு ஊழியம் செய்தார். கி.பி. 60 முதல் 68 வரையிலும் அப். பர்தொலொமேயு ஊழியம் செய்தார். அப். ததேயுவும் அப். பர்தொலொமேயும் ஆர்மீனிய சபையின் பிதாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலனாகிய ததேயு இறுதி ஆண்டுகளை பாரசீகத்தில் கழித்தார். அங்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும் போது கானானியனாகிய சீமோனும் (செலோத்தே எனப்பட்ட சீமோன்) இவருடன் இணைந்தார். அப்போஸ்தலனாகிய ததேயுவும் அப்போஸ்தலனாகிய கானானியனாகிய சீமோனும் சுவானிகர் என்ற இடத்திற்கு சென்றார்கள். அங்கு விக்கிரக ஆராதனை செய்துவந்த கூட்டத்தார் இரு அப்போஸ்தலர்களையும் பிடித்து அங்குள்ள விக்கிரகங்களுக்கு கொடூரமாய் கொன்று பலி செலுத்தினார்கள். இரத்த சாட்சியாய் இருவரும் அந்த மண்ணில் மரித்தார்கள்.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

---

**ஆப்பிள்**

## பழம் சாப்பிடுங்க

வயிற்றுப் போக்கு, சிறுநீரகக் கோளாறுகள், இதய நோய்கள், இரத்த அழுத்தம் போன்றவைகளுக்கு நல்லது.

**– அஹமதி தமிழ் திருச்சபை**

# The Spiritual Realm

“So what shall I do? I will pray with my spirit, but I will also pray with my mind; I will sing with my spirit, but I will also sing with my mind.” (1 Corinthians 14:15)

How real is the spiritual realm? A lawyer tells a personal story of how he was preparing for an important case. He knew that he must be prepared to argue five separate points. He was to appear before his country's supreme court, so it was a very important case.

As he neared the time in which he was to go to court, he began to pray about how he was to argue the case. He spent much time in legal preparation and intercessory prayer. As he went to court, the Spirit spoke to him and said, "Do not argue point one, point two, point three, or point four. Only argue point five." Imagine my friend's struggle of faith. If he were reading this wrong, the shame and professional fallout would be devastating.

The time had come to present the case before the judge when my friend said, "Judge, I wish to withdraw points one through four. I wish to argue only point five."

The opposing counsel stood up and objected. "Your honor, he cannot do that!"

"Objection overruled, counsel," said the judge.

The lawyer went on to present his case around point five only, and then sat down. When the opposing counsel stood to present his case, he stood speechless for 12 minutes. He could not get a word out of his mouth. He finally mumbled a few words and complained to the judge that he was going to have to yield. It seems that the opposing counsel had prepared to argue only points one through four, but failed to prepare for point five. The judge ruled in favor of my friend.

The unseen Lord wants to help us in the physical realm of our work life. We must acknowledge His presence and tap into this incredible resource He has given to each of us. Seek Him today and ask Him to reveal His perfect plan for you this day.

**In Christ**
**Bro. Sam Anand**

---

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 94494541

மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்: -சங். 136:25

## "What is the One thing You and Me want more than anything else"

Dear people in Christ,

As we read in Philippians, Paul the apostle knew what he wanted, he knew The One thing that would give him his greatest desire in life. What was that Onething? In Phil. 3:13-14 declares it …. (Pl read)
What he wanted most was his death-death to his flesh, death to his desires, death to his past, and to all his experiences in the flesh.

What did he long for? What was his greatest desire in life? It was Christ Jesus and His fullness, the calling of God was paul's oneness with Jesus Christ. In Phil. 3:10 he wrote, he wanted to be conformed to the death of Christ Jesus. The apostle wanted to die that Christ might live, He wanted to decrease that Christ might increase, He knew the secret to victory in this world, Paul understood that only total death to self would cause a believer to belong wholly to the lord.

"Is that your Cry? Is that why you pray? Do you pray to become more like Jesus Christ? Do you pray that self may die?

What is your reason for prayer? Is it your needs will be met, or is it Christ image will be formed in you? If its so lets bow down to the Lord and surrender all to Him, Once we begin to experience prayer in its depth, seeking Him with all Our hearts, soul and strength. Then will see the glorious results on our LIFE. If we accept lets say HallelujaH and Amen. God Bless You.

*– AHMADI TAMIL CONGREGATION*

---

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Hepzibha Thomas
Sharon Keerthana
Geona Shamy
Jainy Daniel
Sharon Grace
Solomon
Angeline Priscilla
Helen Prarthana
Jessly Daniel
Lydia. A
Joseph Prince

எருசலேமே; நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக. -சங். 137:5

## கோடையில் குளிர்ச்சி




கோடை காலம் வந்தாச்சு
கடும் வெப்பம் ஏறிப்போச்சு
கோமகனாம் இயேசு உண்டு —அவர்
குளிர்ச்சியாக்கி நடத்துவாரு.

இயேசு மேல நம்பிக்க வச்சு
வாழ்ந்தவங்க வாழ்க்கையெல்லாம்
ஆத்தோரம் நடப்பட்ட —நல்ல
ஆலமரம் போல செழிப்பாச்சுங்க.

இயேசு என்ற செடியோட
கொடியாக இணைஞ்சுட்டா
தப்பாம கனிதந்து —என்றும்
உஷ்ணம் தெரியாம வாழலாங்க.

மற்றோர்க்கும் நிழல் தந்து
இளைப்பாற செய்திடலாம்
பசித்தோர் புசித்திட —சுவை
கனிகளை தந்திடலாம்.

பஞ்சம் என்பதே இல்ல
தஞ்சம் இயேசு இருப்பதாலே
வரட்சி என்பதே இல்ல —இயேசு
வல்லவர் என் மேய்ப்பரா இருப்பதாலே. ஆமென்.

**- ஸ்டாலின்**

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது"

ரோமர். **6:14**

என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்: _சங். 138:7

# தெரிந்து கொள்ளுங்கள்

நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர் யார்? என்று கேட்டால், யாராயிருந்தாலும் உடனே பதில் சொல்ல முந்திக் கொள்வார்கள்ஹ சொல்லியும் விடுவார் கள் நீல் ஆம்ஸ்ட்ராங்க் என்று. ஆனால் நிலவில் முதன் முதல் கால் வைத்திருக்க வேண்டியவா யார் தெரியுமா? பல பேருக்குத் தெரியாது என்பதால் அதையும் நானே சொல்லி விடுகிறேன். நிலவில் முதலில் கால் வைக்க வேண்டியவர் எட்வின் சி. ஆல்ட்ரின். இவர் தான் நிலவுக்கு சென்ற அப்பல்லோ விண்கலத்தின் பைலட் (விமானி). ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். மேலும் விண் நடை அனுபவம் உள்ளவர். அதனால் தான் அவர் பைலட்டாக நியமிக்கப்பட்டார்.

ஆனால் நீல் ஆம்ஸ்ட்ராங்க் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால் தான் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கோ—பைலட் அதாவது இணை விமானியாக செயல்பட்டார். இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து Pilot First (முதலில் பைலட் இறங்கு) என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஆல்ட்ரினுக்கோ மனதில் டிக் டிக் டிக். அதாவது ஆல்ட்ரினுடைய மனதில் பயமும் தயக்கமும் ஏற்பட்டது. இடது காலை எடுத்து வைப்பதா! வலது காலை எடுத்து வைப்பதா! என்றல்ல. நிலவில் முதன் முதலில் கால் வைக்கப் போகிறோம் புவியீர்ப்பு விசையற்ற இந்த இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால்.... எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால்.... என்ற பயமும் தயக்கமும் தான் ஆல்ட்ரினுக்குள் ஏற்பட்டிருந்தது. அதுவும் மணிக்கணக்காக தாமதிக்கவும் இல்லைஹ சில நொடிகள் தான் தாமதித்திருப்பார்.

அதற்குள் நாசாவிலிருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. Co-Pilot Next; (இணை விமானி இறங்கு) என்று. இணை விமானியாக செயல்பட்ட நீல் ஆம்ஸ்ட்ராங்க் கட்டளை வந்த அடுத்த நொடியில் காலடி எடுத்து நிலவில் வைத்தார். உலக வரலாறும் ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமை யும் தகுதியும் இருந்தும்கூட பயமும் தயக்கமும் ஏற்பட்டதால் தாமதம் உருவா னது. பெரும் புகழையும் மேன்மையையும் இழக்க நேரிட்டது. இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை. எந்த அளவுக்கு பயம், தயக்கம் இருக்கிறதோ அந்த அளவுக்கு அவைகள் நம் வெற்றியை பாதிக்கும். பயம் கர்த்தரிடத்தில் இருக்கட்டும். தயக்கம் பாவத்தை நெருங்கும் பொழுது இருக்கட்டும். ஜெயம் கர்த்தரால் (இயேசு கிறிஸ்துவால்) வரும்.

**அன்புள்ள சகோதரன்**
**வி. ஜோசப்**

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**
சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்ஹ உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. _சங். 139:12



## சரியாய் பதில் சொன்னால் தானே பரிசு!

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. ஒரு சேக்கல் என்பது எத்தனை கேரா?
2. சூரியோதய திசை எது?
3. இஸ்ரவேல் பிரபுக்கள் செலுத்திய காணிக்கைகள் எவை?
4. காலேப் எந்த கோத்திரத்தை சேர்ந்தவன்?
5. ஆடு மேய்ப்பதற்கு தகுந்த இடங்கள் எவை?
6. கர்த்தரின் அக்கினி பற்றி எரிந்த இடத்தின் பெயர் என்ன?
7. கோராகின் காரியத்தினிமித்தம் வாதையினால் எத்தனை பேர் செத்தார்கள்?
8. தேவனின் கட்டளையை மீரமாட்டேன் என்றது யார்?
9. வாதைகளால் இறந்தவர்களை அடக்கம் பண்ணப்பட்ட இடம் எது?
10. கண் திறக்கப்பட்டவன் யார்?
11. துர்ச்செய்தி பறப்பினவர்களுக்கு நேர்ந்தது என்ன?
12. ஆரோன் எங்கு மரித்தான்?
13. மேகம் எந்த வனாந்தரத்தின் மேல் தங்கிற்று?
14. செலொப்பியாத்தின் குமாரத்திகளின் பெயர்கள் என்ன?
15. ஒருவன் அறியாமையினால் பாவம் செய்தால் அவன் என்ன செய்ய வேண்டும்?

**<u>குறிப்பு</u>:- வேதாகமத்தில் எண்ணாகமத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 21-06-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.**

---

### உஷார்...




நீ மேலே உயரும்போது
நண்பர்கள் உன்னைத் தேடுவார்கள்.
நீ கீழே இறங்கும்போது
நீ நம்பிய நண்பர்கள்
உன்னை விட்டு ஓடுவார்கள்!
நீ எந்த நிலையில் இருந்தாலும்
கூடவே இருப்பவரும் காப்பவரும்
இயேசு ஒருவரே.

**- கொம்மையன்**

கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்; அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப்பார்க்கிறார்கள். -சங். 140:4



ஒரு ஊரில்

# அன்புள்ள நண்பரே!

சுண்டெலி ஒன்று தவளையின் நட்பை பெற வேண்டும் என்று மிகுந்த ஆவல் கொண்டது. ஆகவே பல முயற்சிகள் செய்து இறுதியில் தவளையின் நட்பை பெற்றது. தவளையோ பெரும்பாலும் தண்ணீரிலேயே வசித்து வந்தது. சுண்டலியோ தான் அதிக மான நேரத்தை தவளையோடு செலவிட வேண்டும் என்று நினைத்து நீச்சல் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் உண்டானது. தனது விருப்பத்தை சுண்டெலி தவளையிடம் அறிவித்தது. ஒரு நாள் சுண்டெலிக்கு நீச்சல் கற்றுக் கொடுப்பதாகக் கூறி சுண்டெலியின் காலை தன் காலுடன் ஒன்றாய் சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கொண்டது. இந்த வினோத நிகழ்வுகளை மேலே பறந்து கொண்டிருந்த பருந்து தன் ஓரக் கண்ணால் கூர்மையாய் கவனித்துக் கொண்டிருந்தது. சுண்டெலியும் தவளையும் எதிர்பாரா வேளையில் பருந்து கொத்திச் செல்ல மிக வேகத்தில் கீழ் நோக்கி வந்தது. இதை எதார்த்தமாய் கவனித்த தவளை சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது. மிக அருகில் பருந்து வருவதை கவனித்த தவளை தண்ணீருக்குள் தன்னை மறைத்துக் கொள்ள நினைத்து சற்று ஆழமாய் செல்ல ஆரம்பித்தது. தவளை தன் உயிர் பயத்தில் தன் காலோடு கட்டப்பட்டிருந்த சுண்டெலியை இமைப் பொழுது மறந்தும் போனது. தவளை தன்னை மறைத்துக் கொள்ள ஆழமான நீருக்குள் செல்லச் செல்ல சுண்டெலிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. சில நொடிகளில் சுண்டெலிக்கு மரண மும் நேரிட்டது. சுண்டெலி மரித்துப் போனதால் பொழுது செல்லச் செல்ல, மெல்ல மெல்ல சுண்டெலி தண்ணீரின் உள்ளிருந்து மேல் நோக்கி எழும்ப ஆரம்பித்தது. சுண்டெலின் கால்கள் தவளையின் கால்களோடு கட்டப்பட்டிருந்த காரணத்தால் தவளை யும் சுண்டெலியோடு மெல்ல மெல்ல மேல் நோக்கி வரத் தொடங்கியது.

நல்ல வாய்ப்பையும் இன்றைய அசைவ உணவையும் தவற விட்டுவிட்டோமே என்று வேதனையோடு அந்த இடத்தைச் சுற்றி சுற்றி பருந்தும் பறந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் பருந்தின் முகத்தில் புன் முறுவல் உதயமானது. காரணம் எந்த சுண்டெலியையும் தவளையையும் தவறவிட்டு விட்டோம் என்று எண்ணி பருந்து கவலைப்பட்டதோ அந்த சுண்டெலியும் தவளையும் தண்ணீரின் மேல் மிதப்பதை பார்த்தது பருந்து. மகிழ்வோடு பருந்து கீழ் இறங்கி வந்து சுண்டெலியையும் தவளை யையும் கொத்திக் கொண்டு சென்றதுஹ கொன்று தின்றது. நாம் மற்றவரோடு நட்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் அவர்கள் நற்பண்புகளுடைய நல்லவரா! என்று உய்த்துணர்ந்து நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தவளைக்கு ஏற்பட்ட கெதிதான் நேரிடும்.

கர்த்தருக்கு பிரியமானவர்களே! மூடருடைய நட்பையும் சுய ஆதாயத்திற்காக ஏற்படுத்தும் நட்பையும் விட்டு விலகுங்கள்.ஏனென்றால் வேதம் சொல்கிறது,““**ஞானிக ளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான் மூடருக்குத் தோழனோ நாசமடைவான்””** (நீதி. 13:20)என்று. பன்றியோடு சேர்ந்த பசுபோல் ஆகிவிடாதீர்கள். சங். 133:1 சொல்லுகிறது, இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது என்று (சங். 133:1). கர்த்தருக்கு பயந்த நல் விசுவாசிகளோடு ஐக்கியம்(நட்பு)வைத்துக்கொள்ளுங்கள்.அதனால் தேவனிடமிருந்து நன்மையும் இன்பமும்உண்டாகுமே.ஆமென்

**கர்த்தரின் கிருபையில்**
**லிடியா ஆ. தாஸ்**

துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக; நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன். -சங். 141:10

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485





**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

Private Circulation only